# மாலைக்கதிர்

Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை 20.09.2024 கதிர் 366

# பசில் மற்றும் நாமலின் உறவினர்கள் அவசரமாக அமெரிக்கா சென்றனர்

## ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் நாட்டை விட்டு வெளியேறினார்கள்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ மற்றும், பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் இன்று அதிகாலை நாட்டைவிட்டு அவ சரமாக வெளியேறியுள்ளார். நாளை தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அவர்கள் இன்று காலை அவசரமாக நாட்டை விட்டு வெளியேறியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பசில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இன்று அதிகாலை 03.05 இற்கு எமரேட்ஸ் விமானத்தில் டுபாய் நோக்கி புறப்பட்டதாக விமான நிலைய தவல்கள் தெரிவிக்கின்றன.

6➤



## தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி வாக்குப் பெட்டிகள் அனுப்பிவைப்பு



வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பை பொலிஸார் பொறுப்பேற்றனர்.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாளை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரையில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 160 தேர்தல் தொகுதிகளில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் நடைபெறவுள்ளதுடன், இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களினூடாக பூர்த்தி செய்யப்பட்டு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இதனையொட்டி இன்று காலை முதல் வாக்களிப்பு நிலையங்கள் அமையவுள்ள பகுதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். அத்துடன் இரண்டு இலட்சம் வரையிலான அரச ஊழியர்கள் வாக்களிப்பு நிலையங்களில் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நாளை காலை 7 மணி முதல் வாக்களிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இதன்போது வாக்காளர் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது அவசியமாகும். தேசிய அடையாள அட்டை, தேர்தல்கள் ஆணையாளரினால் அனுமதியளிக்கப்பட்ட அடையாள ஆவணங்கள், வெளிநாட்டு கடவுச்சீட்டு, சாரதி அனுமதி பத்திரம், முதியோர் அடையாள அட்டை அல்லது கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை ஆகியவற்றில் ஒன்றை வாக்களிப்பின் போது கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறாக ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும். இதேவேளை நாளைய தினம் காலை முதல் விசேட அனைத்து பிரதேசங்களிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக 60ஆயிரம் பொலிஸாரும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## தேர்தலுக்குப் பின் ஒரு வார காலம் பாதுகாப்புக்காக விசேட ஏற்பாடு

### அதிரடிப்படை, முப்படை களமிறக்கப்படும்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறவிருக்கும் நிலையில், தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் வன்முறைகளைத் தடுக்கும் வகையில், ஒருவார காலத்திற்கு பொலிஸ், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினரை உள்ளடக்கிய விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுலில் இருக்கும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் நாளை சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது. 17 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்கள் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நாட்டை இயக்க அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தத் தகுதி பெற்றுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலப்பகுதிகளை உள்ளடக்கும் வகையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

வாக்குப் பதிவுக்கு அடுத்த வாரமும் தேர்தல் காலமாகக் கருதப்படும்

6➤

## 5,214 முறைப்பாடுகள்

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 5,214 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,656 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 3,415 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 33 முறைப்பாடுகளும், தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஏனைய விடயங்கள் தொடர்பில் 109 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வாக்குப் பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும் அனுப்பிவைப்பு





இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபயை தெரிவு செய்வதற்காக நாளை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக யாழ் மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லும் பணிகள் இன்று காலை 8.30 மணியிலிருந்து ஆரம்பமானது.

யாழ்.மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்படுகின்றன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் வாக்குப் பெட்டிகளை எடுத்து செல்ல போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதனை காணக்கூடியதாக உள்ளதுடன் அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடி படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (01)



# மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் மூவர் அதிரடியாக நீக்கம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன மற்றும் எஸ். எம். சந்திரசேன ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அந்த கட்சி தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் அவர்கள் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் கட்சிப் பதவிகளிலிருந்தும் உடனடியாக நீக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

# தொடர்பு சாதனங்களை தவித்துக்கொள்ளுங்கள்

## லெபனானிலுள்ள இலங்கை மக்களுக்கு அறிவுறுத்தல்

லெபனானில் உள்ள இலங்கையர்கள் தொலைத் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும் என லெபனானிற்கான இலங்கை தூதரகம் வேண்டுகோள் விடுத துள்ளது.

லெபனானில் உள்ள ஹெஸ்புல்லா அமைப்பின் பேஜர்கள் தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆயிரக்கணக்கில் வெடித்துசிதறிய சம்பவத்தின் பின்னர் லெபனானில் உள்ள இலங்கையர்களிற்கு இலங்கை தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையர்கள் மக்கள் அதிகளவில் கூடும் பகுதிகளை பொதுநிகழ்வுகளை நீண்டதூர பயணங்களை தற்காலிகமாக தவிர்க்கவேண்டும் என இலங்கை தூ தரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இக்காலப்பகுதியில் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை தற்காலிகமாக தவிர்க்குமாறும் தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# 137 வாக்களிப்பு நிலையங்கள் முல்லைத்தீவில் அமைப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில்137 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்கு பெட்டிகள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடளாவிய ரீதியில் இடம்பெற இருக்கின்ற தேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 137 வாக்களிப்பு நிலையங்களிற்கே இவ்வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 86,889 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்குரிய 137 நிலையங்களுக்கும் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலிருந்து இன்று காலை 7 மணி முதல் வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஐந்தரை லட்சம் வாக்காளர் அம்பாறையில் வாக்களிப்பர்

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி தேர்தலுக்காக நாளை சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் ஐந்தரை லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர் என அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தக அபேவிக்ரம நேற்று குறிப்பிட்டார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 555,432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படி அம்பாறை 188222 பேர், சம்மாந்துறை 99727 பேர், கல்முனை 82830 பேர், பொத்துவில் தொகுதியில் 184653 பேர் ஆகும்.இம்மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 04 ஆகும்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் 184 அம்பாறை வாக்களிப்பு நிலையங்கள், 93 சம்மாந்துறை வாக்களிப்பு நிலையங்கள், 74 கல்முனை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் 177 பொத்துவில் வாக்களிப்பு நிலையங்கள் உட்பட 528 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 27645 ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 26778 எனவும் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அம்பாறை மாவட்ட தேர்தல் அதிகாரிஃமாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளது. அம்பாறை ஹாடி உயர்தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

.இதேவேளை, வாக்காளர்கள் அனைவரும் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும், இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையை பயன்படுத்துமாறும் இதன்போது அவர் தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையத்தில் நாளை செப்டம்பர் 21ம் திகதி காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 04 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் அம்பாறை ஹாடி உயர்தொழில்நுட்ப வளாகத்தில் இன்று காலை 07 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் வாக்குப் பெட்டிகள் பாதுகாப்புடன் அனுப்பி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

ஜனாதிபதி தேர்தலானது நாளை இடம் பெறவுள்ள நிலையில் வாக்கு சாவடிகளுக்கான வாக்கு பெட்டிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் குறித்த வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இன்று அனுப்பி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் குறித்த வாக்கு பெட்டிகளானது திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் வைத்து விநியோக நடவடிக்கை இடம்பெற்றது.

மொத்தமாக 318 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன. மொத்தமாக திருகோணமலை மாவட்டத்தில் 315,925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# கிளிநொச்சியில் 108 நிலையங்கள் நாளைய தினம் வாக்களிப்பு




கிளிநொச்சி மாவட டத்தில் ஜனாதிபதி தேர்தல் 2024 இற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 108 வாக களிப்பு

நிலையங்களும், எட்டு வாக்கு எண்ணும் நிலையங்களும் காணப் படுகின்றன என மாவட்ட அரச அதிபர் எஸ் முரளி தரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடுஜனாதிபதி தேர்த லுக்கான பாதுகாப்பு கடமைகளுக்காக 400 பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள ளதுடன் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஒரு லட்சத்து தொள்ளாயிரத்து ஏழு வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி உடையவர்களாக உள்ளனர்

40பேருந்துகளில் வாக்குக் பெட்டிகள் உரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

# இன்று காலை தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு! ஒருவர் பலி



தெஹிவளையில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கடவத்த வீதியில் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. இதில் 45 வயதுடைய ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 48 மணித்தியாலங்களில் நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.


அவற்றில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நேற்று இரவு இடம்பெற்றுள்ளதுடன், தெஹிவளையில் ஹோட்டல் உரிமையாளரும் கொல்லப்பட்டுள்ளார்.

அத்துடன், நேற்று காலை காலி - மாத்தறை பிரதான வீதியின் மிதிகமவில் நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், தங்காலையிலும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் இருவர் காயமடைந்துள்ளதுடன், இன்றைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் கடந்த 48 மணித்தியாலங்களில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.



# கனடா மாணவர் விசாவில் மாற்றம்!



## மாணவர்களுக்கு சிக்கல் ஏற்படுமா?

**கனடா நாட்டில் தற்காலிகமாக வசிப்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக வெளிநாட்டு ஊழியர்களுக்கான விதிமுறைகளையும், தனது அரசாங்கம் கடுமையாக்க இருப்பதாக ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**




வெளிநாடு சென்று படிக்க விரும்பும் மாணவர்களின் முக்கிய பிரச்னையான மாணவர் விசா குறித்த ஓர் அறிவிப்பை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ளார்.

ட்ஷரூடோ தனது எக்ஸ் பக்கத்தில் ஒரு பதிவின் மூலம் இந்த அறிவிப்பைப் பற்றி தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு, வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா எண்ணிக்கையை இன்னும் குறைக்கப் போவதாக அவர் கூறியுள்ளார்.

“இந்த ஆண்டு, 35 சதவிகிதத்திற்கும் குறைவாகவே வெளிநாட்டு மாணவர்களுக்கு நாங்கள் விசா வழங்கியுள்ளோம். அடுத்த ஆண்டு, இந்த எண்ணிக்கை மேலும் 10 சதவிகிதம் குறைக்கப்படும்.”

“குடியேற்றம் நமது பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும், ஆனால் இந்த திட்டத்தை தவறான விதத்தில் பயன்படுத்தி மாணவர்களை தனக்கு சாதகமாக பயன்படுத்துபவர்களின் மீது நடவடிக்கை எடுப்போம்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா நாட்டில் தற்காலிகமாக வசிப்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக வெளிநாட்டு ஊழியர்களுக்கான விதிமுறைகளையும், தனது அரசாங்கம் கடுமையாக்க இருப்பதாக ட்ஷரூடோ தெரிவித்துள்ளார்.

“நாங்கள் குறைந்த ஊதியம் பெறும், தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் பணிக்காலத்தையும் குறைக்க உள்ளோம்”.

“கொரோனாவுக்கு பிறகு நாங்கள் இந்த திட்டத்தை சரி செய்ய முயற்சி செய்தோம், ஆனால் தொழிலாளர் சந்தையில் தற்போது மாற்றம் அடைந்துள்ளது. கனடா நாட்டு பணியாளர்களுக்கு வேலை வழங்க எங்களுக்கு அதிக நிறுவனங்களின் முதலீடு தேவை” என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் கனடா செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான இந்திய மாணவர்கள் படிப்பிற்காக வெளிநாடு செல்கின்றனர். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, இந்தியாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் கனடாவுக்கே சென்று படிக்கின்றனர்.

ஆனால் தற்போது கனடா அரசின் இந்த முடிவினால், அந்த மாணவர்களுக்கு இன்னும் பிரச்னைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2024-ஆம் ஆண்டில் 4 லட்சத்து 27 ஆயிரம் மாணவர்கள் கனடா சென்றுள்ளனர். இரண்டாம் இடத்தில் அமெரிக்கா உள்ளது, அங்கு 3 லட்சத்து 37 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் இந்த ஆண்டு சென்றுள்ளனர். இந்த பட்டியலில் மூன்றாம் இடத்தில் பிரிட்டனும், நான்காம் இடத்தில் ஆஸ்திரேலியாவும் மற்றும் ஐந்தாம் இடத்தில் ஜெர்மனியும் இருக்கிறது.

இந்திய மாநிலங்களவையில் வெளியிடப்பட்ட தரவு களின் படி, 2019-ஆம் ஆண்டு 6 லட்சத்து 74 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் படிப்பதற்காக வெளிநாடு சென்றனர், அது 2024-ஆம் ஆண்டு 13 லட்சத்து 35 ஆயிரமாக உயர்ந்து கிட்டத்தட்ட இருமடங்காகியுள்ளது.

இருப்பினும், எந்த மாநிலத்தில் இருந்து எத்தனை மாணவர்கள் படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பது குறித்த மாநில வாரியான தரவுகள் அமைச்சகத்திடம் இல்லை.

கனடா மாணவர்களை விட மற்ற நாடுகளில் படிக்கும் மாணவர்கள் மூன்று மடங்கு அதிக கல்விக் கட்டணத்தை செலுத்த வேண்டியதாக உள்ளது.

வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கட்டணம் மட்டும் கனடா நாட்டின் பொருளாதாரத்திற்கு 22 பில்லியன் கனடிய டாலர்கள் பங்களித்துள்ளது. சுமார் 2.2 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என கனடா அரசாங்கத்தின் 2022-ஆம் ஆண்டிற்கான அறிக்கை தெரிவிக்கின்றது.

தனது நாட்டிற்கான மாணவர் விசா குறித்து முதல்முறையாக இந்த அறிவிப்பை கனடா வெளியிடவில்லை. ஏற்கனவே கனடா கல்விக்கட்டணத்தை உயர்த்துவதாகவும் வெளிநாட்டு மாணவர்களுக்கான விதிகளை கடுமையாக்குவதாகவும் அறிவித்துள்ளது.

சமீபத்திய மாதங்களில், ஜஸ்டின் ட்ஷரூடோ தலைமையிலான அரசாங்கம் வெளிநாட்டு மாணவர்களுக்கான விசா வழங்கப்படுவது குறித்தும், படிப்பு முடிந்த பிறகு மாணவர்கள் அங்கேயே பணிபுரிவதற்கான அனுமதி நீட்டிப்பு குறித்தும் மாற்றங்களைச் செய்ய மறுத்துள்ளது.

இதன்காரணமாக பல வெளிநாட்டு மாணவர்கள் அவர்களது தாய் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படும் ஆபத்தில் உள்ளனர்.

கனடாவில் படித்த பிறகு, வெளிநாட்டு மாணவர்கள் மூன்று வருட பணி அனுமதியைப் பெறுகிறார்கள். இதன் போது அந்த மாணவர்கள் கனடாவில் உள்ள பல்வேறு குடியுரிமை பெறும் திட்டத்தின் கீழ் அந்நாட்டில் நிரந்தர குடியுரிமை பெற விண்ணப்பிக்கலாம்.

கொரோனா தொற்று காலத்தில் தொழிலாளர் சந்தையில் ஏற்பட்ட தேவையை ஈடு செய்ய, பணி அனுமதிக்கான காலத்தை இன்னும் 18 மாதங்களுக்கு தற்காலிகமாக நீட்டிக்கும் கொள்கையை கனடா நடைமுறைப்படுத்தியது. ஆனால் சமீபத்தில் கனடா இந்த விதியை மாற்றியுள்ளது.

### கட்டணம் அதிகரிப்பு

அதே நேரத்தில், உத்தரவாத முதலீட்டுச் சான்றிதழ் (புஜஊ) கட்டணம் 10 ஆயிரம் கனடியன் டொலர்களில் இருந்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான கனடியன் டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

புஜஊ தொடர்பான புதிய விதிகள் 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1- ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.

ஒவ்வொரு வெளிநாடு மாணவரும் புஜஊ என்ற பெயரில் ஒரு டெப்போசிட் செய்யவேண்டியிருக்கிறது. மாணவர்கள் கனடாவுக்கு செல்லவும் அங்கே வாழவும் தங்களிடம் போதிய பணவசதி உள்ளது என்பதை குறிக்கும் ஆதாரமே புஜஊ டெபாசிட் ஆகும்.

படித்து முடித்த பிறகு, இது மாணவர்களுக்கு தவணை முறையில் திருப்பி அளிக்கப்படும்.

### வாழ்க்கை துணைக்கான விசாவில் மாற்றம்

வாழ்க்கைத் துணை விசா என்பது ஒரு வகையான சார்பு விசா ஆகும். இந்த விசாவை வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்கள் குடும்பத்துடன் வாசிப்பதற்காக இதனை பயன்படுத்துகின்றனர்.

கனடாவில் முதுநிலை அல்லது முனைவர் பட்டம் படிக்க செல்லும் வெளிநாட்டு மாணவர்களின் வாழ்க்கைத் துணைக்கு மட்டுமே இனி விசா வழங்கயிருப்பதாக கனடா தெரிவித்துள்ளது.

இளநிலை கல்வி பயிலும் மாணவர்களின் வாழ்க்கைத் துணைக்கு இந்த விசா வழங்கப்படாது.

### வேலை நேரம் குறைப்பு

இந்த ஆண்டின் தொடக்கத்தில், வெளிநாட்டு மாணவர்கள் பகுதி நேரமாக பணி புரிவதற்குமான நேரத்தையும் கனடா குறைத்தது

கனடா அரசாங்கத்தின் தற்போதைய முடிவின்படி, வெளிநாட்டு மாணவர்கள் ஒரு வாரத்தில் மொத்தம் 24 மணிநேரம் வரை பகுதி நேர வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை வெளிநாட்டு மாணவர்கள் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் வரை பகுதி நேர வேலைக்கு செல்ல அனுமதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(BBC)



# தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற அக்கரைப்பற்று முஸ்லிம் கல்லூரி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தால்மாணவர்களிடையே அகில இலங்கைரீதியில்நடத்தப்பட்ட போட்டியில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி நான்கு போட்டிகளில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் மிக விமரிசையாக நடத்தப்பட்ட மேற்படி நிகழ்வு அக்கரைப்பற்று ஹல்லாஜ் மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் கே.சமீம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.சம்சுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் ரக்சூர் ரபான், கஸீதா, அரபுஎழுத்தணிக்கலை, அரபுத்தமிழ் இலக்கியம் ஆகிய போட்டிகளில்இக்கல்லூரிமாணவர்கள் முதலாமிடத்தைபெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் பங்கு கொண்ட மாணவர்கள், அவர்களைபயிற்றுவித்த வளவாளர்கள், உதவிகள் வழங்கிய ஆசிரியர்கள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலை அணி சாம்பியன்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களுள் ஒன்றான ஆண்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டியில்யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆண்கள் அணி சம்பியனாகவும், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில்இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பேரதெனிய பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தை 44:47 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சம்பியனானது.

பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பெண்கள் அணி 48:38 என்ற புள்ளி அடிப்படையில் சப்ரகமுவ பல்கலைக்கழக பெண்கள் அணியுடன் தோல்வியுற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது



## பசில் மற்றும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள "கோல்ட் ஷரூட்" முனையத்தை பயன்படுத்துவதற்கும் அவர் 206 அமெரிக்க டொலர்களை செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பசில் ராஜபக்ஷ டுபாய் சென்று அங்கிருந்து அமெரிக்கா செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷவின் மாமியார், இரு பிள்ளைகள் , இரு பணிப்பெண்கள் மற்றும் உறவினரான மற்றொரு பெண் ஆகியோரும் இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக டுபாய்க்கு பயணமாகியுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் அறுவரும் இன்று காலை 10.05 மணியளவில் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸின் மற்றொரு விமானத்தின் ஊடாக டுபாய் பயணமாகியுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைந்துள்ள 'சில்க் ஷரூட்' முனையத்தின் வசதிகளையும் பெற்றுக்கொண்ட இவர்கள் இந்த சேவைக்காக ஒருவருக்கு தலா 52 அமெரிக்க டொலர்களை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் பாய்க்குச் சென்று அங்கிருந்து அமெரிக்காவுக்கு செல்வதற்கு திட்டமிட்டிருக்கலாம் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றிரவு வெளியேறவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேர்தலுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் நீட்டிக்கப்பட்ட ஒரு வார காலத்தை ஈடுகட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். பாதுகாப்பை உறுதி செய்வதில் பொலிஸ் முதன்மைப் பொறுப்பு வகிக்கிறது. அவர்களுக்கு விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவம் உதவியாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து பிரசாரங்களும் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்தது. அமைதியான காலத்தில், பிரசாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, இம்முறை பாரிய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகாத வகையில் அமைதியான முறையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தேர்தல் தொடர்பான பணிகளுக்காக சுமார 65,000 பொலிஸார் தேவைப்படுவதாகவும், தேவை ஏற்பட்டால் மேலதிக பொலிஸார் அழைக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

# பணிக்கு வராதுவிட்டால் தண்டனைக்குரிய குற்றம்

தேர்தல் கடமைகளுக்காக வழங்கப்படும் நியமனக் கடிதங்கள் எவ்விதத்திலும் மாற்றப்படவோ, இரத்து செய்யப்படவோ மாட்டாது எனவும், கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் பணிக்கு சமூகமளிக்காவிட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக்காக அனைத்து உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு தேவையான அனைத்து பணிப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் குறித்த தினத்தில் கண்டிப்பாக நியமிக்கப்பட்ட இடங்களுக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் தலைவர் தெரிவித்தார்.

## தேர்தல் நடவடிக்கையிலிருந்து மூன்று அதிகாரிகள் நீக்கம்

ஜனாதிபதி வேட்பாளர்களுக்காக தனிப்பட்ட ரீதியில் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்த காரணத்தினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் இருந்து 9 அரச அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் எம். பி. சுமணசேகர தெரிவித்துள்ளார்.

ஒன்பது அதிபர்கள், ஒரு பிரதி அதிபர், நான்கு ஆசிரியர்கள், ஒரு பொது சுகாதார பரிசோதகர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் மூன்று வைத்தியர்கள் உட்பட 19 அரச உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட ரீதியில் வேட்பாளர்களுக்காக தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்ததாக அம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் சர்ச்சைத் தீர்வு மையத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன்படி, பல விசாரணைகளின் பின்னர் 19 அதிகாரிகளில் 9 பேர் தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் அதிகாரி எம். பி. சுமனசேகர தெரிவித்தார்.

## இலங்கை இளைஞர் சுவிஸில் மரணம் இருவர் கைது

சுவிஸில் வசித்து வந்த இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளாட்ப்ஷுருக்கில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த 34 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 18ஆம் திகதி குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும், உயிரிழந்தவர் திருகோணமலையை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர சேவை மையத்திற்கு கிடைத்த அழைப்பின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், சம்பவ இடத்திலேயே இருவரையும் கைது செய்துள்ளனர்.

40 மற்றும் 54 வயதான இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், இலங்கை இளைஞரின் உயிரிழப்புக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

## வாக்காளர் அட்டைகள் பறிப்பு

நிவித்திகல பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத 6 பேர், வீட்டிலிருந்து 3 வாக்காளர் அட்டைகளை வலுக்கட்டாயமாக எடுத்துச்சென்றுள்ளதாக நிவித்திகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர் நிவித்திகல, இந்தோலதும்மலவத்தை பிரதேசத்தில் இறப்பர் தோட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் வசித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரும் கூலி தொழிலாளியுமான குறித்த பெண்ணே இம்முறைப்பாட்டினை செய்துள்ளார்.

முறைப்பாட்டாளரின் வீட்டிற்கு அண்மித்த பகுதிகளில் வீடுகள் இல்லையெனவும், அந்த வீட்டுக்குச் செல்வதற்கு வீதி இல்லை எனவும், வீட்டுக்குச் செல்ல சுமார் 2 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


இச்சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த போதிலும் எந்த தடயமும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# கொரோனா வைரஸ் புதிய திரிபு மீண்டும் பேரலையாக மாறுமா?

**கோவிட் தொற்றால் கடுமையாக பாதிக்கப்படும் வாய்ப்புள்ளவர்களுக்கு பிரிட்டன் சுகாதார அமைப்பான என். ஹெச்.எஸ் இலவசமாக பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்குகிறது.**



கொரோனா வைரஸின் புதிய திரிபால் மேற்கத்திய நாடுகளில் பலரும் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், வரும் நாட்களில் அதன் தீவிரம் இன்னும் அதிகமாகும் என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் ஜெர்மனியில் அடையாளம் காணப்பட்ட எக்ஸ்.ஈ.சி (XEC) எனும் கோவிட் வைரஸின் புதிய திரிபு, இதுவரை பிரிட்டன், அமெரிக்கா, டென்மார்க் உள்ளிட்ட பல நாடுகளில் பரவியுள்ளதாக, எக்ஸ் சமூக வலைதள பயனர்கள் தெரிவிக்கின்றனர்.

குளிர் காலத்தில் வேகமாக பரவத்தக்க சில புதிய பிறழ்வுகளை இந்த வைரஸ் கொண்டிருப்பதாகவும் தடுப்பூசிகள் பயன்பாடு காரணமாக இந்த திரிபால் மனிதர்களுக்கு தீவிரமான பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவு என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கோவிட் தொற்றால் கடுமையாக பாதிக்கப்படும் வாய்ப்புள்ளவர்களுக்கு பிரிட்டன் சுகாதார அமைப்பான என்.ஹெச்.எஸ் இலவசமாக பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்குகிறது.

சமீப கால புதிய கொரோனா திரிபுகளுக்கு ஏற்ப தடுப்பூசிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஓநுஊ எனும் இந்த புதிய திரிபு, முந்தைய ஒமிக்ரான் திரிபிலிருந்து உருவானதாகும்.

லண்டனில் உள்ள யுனிவர்சிட்டி காலேஜில் மரபியல் மையத்தின் இயக்குநராக உள்ள பேராசிரியர் ஃபிராங்காயிஸ் பால்லாக்ஸ் பிபிசியிடம் கூறுகையில், "கோவிட் வைரஸின் முந்தைய திரிபுகளைவிட இந்த புதிய திரிபு வேகமாக பரவும் தன்மை கொண்டிருந்தாலும் இதற்கு எதிராக தடுப்பூசிகள் சிறப்பாக செயலாற்றும்" என்றார்.

இந்த புதிய திரிபு குளிர்காலத்தில் அதிகளவில் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என அவர் தெரிவித்தார்.

### அலையாக மாறுமா?

கலிஃபோர்னியாவில் உள்ள ஸ்க்ரிப்ஸ் ரிசர்ச் டிரான்ஸ்லேஷனல் மையத்தின் இயக்குநர் எரிக் டோபோல், "இந்த புதிய திரிபு தற்போதுதான் தொடங்கியுள்ளது" என கூறினார்.

"இது ஓர் அலையாக மாறுவதற்கு பல வாரங்கள் அல்லது சில மாதங்கள் கூட ஆகலாம்," என அவர் டுயு டைம்ஸ் ஊடகத்திடம் தெரிவித்தார்.

### அறிகுறிகள் என்ன?

முந்தைய திரிபுகளை போன்றே சளி அல்லது காய்ச்சல் போன்றவை அறிகுறிகளாக உள்ளன.

அதிக உடல் வெப்பம்
உடல் வலி
சோர்வு
இருமல் அல்லது வறண்ட தொண்டை

பாதிப்பு ஏற்பட்ட சில வாரங்களில் பெரும்பாலானோரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் நீண்ட நாட்களுக்கு பிறகே குணமடைவர்.

இந்த புதிய திரிபின் தாக்கம் டென்மார்க் மற்றும் ஜெர்மனியில் அதிகம் இருப்பதாக, எக்ஸ் பக்கத்தில் கோவிட் தரவுகள் குறித்து ஆராய்ந்துவரும் மைக் ஹனி தெரிவித்துள்ளார்.

முன்பைவிட தற்போது குறைவான பரிசோதனைகளே செய்யப்படும் நிலையில், எவ்வளவு பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை கண்டறிவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனின் சுகாதார பாதுகாப்பு முகமை (ருமுஉளுய) கூறுகையில், வைரஸ்களில் பிறழ்வுகள் ஏற்பட்டு, புதிய திரிபுகள் தோன்றுவது வழக்கமானதுதான் என தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் சுகாதார பாதுகாப்பு முகமையின் துணை இயக்குநர் டாக்டர் காயத்ரி அமிர்தலிங்கம் கூறுகையில், "மரபியல் ரீதியாக வைரஸ்கள் ஒவ்வொரு காலத்திற்கும் மாறுவது சாதாரணமானதுதான்.

பிரிட்டன் மற்றும் உலகளவில் பரவும் கோவிட்டின் திரிபுகள் குறித்து ருமுஉளுய அனைத்து தரவுகளையும் கண்காணித்து வருகிறது, எங்களிடம் உள்ள தரவுகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறோம். கோவிட் 19 தொற்றுக்கு எதிராக தீவிரமான உடல்நல பாதிப்புகள் ஏற்படுவதிலிருந்து தடுப்பூசிகள் சிறந்த பாதுகாப்பை வழங்குகின்றன" என்றார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# கடினப்பந்து கிரிக்கெட் பயிற்சி ஆடுகளம் கரப்பந்தாட்ட மைதானம் திறந்து வைப்பு!









(அபு அலா)

திருகோணமலை உவர்மலை விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட கடினப்பந்து கிரிக்கெட் பயிற்சி ஆடுகளம் மற்றும் கரப்பந்தாட்ட மைதானம் திறப்பு விழா நேற்று மாலை இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இதனை திறந்து வைத்தார்.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதனாயக்கா, ஆளுநரின் பிரத்யேக செயலாளர் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2024இல் வெளியிடப்பெற்றது.